DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : STC 4/**2024** |
| Deposition of Witness for | : PW 5 |
| Name | : டாக்டர்.அகிலாண்டபாரதி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 19.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 19th February 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவிலில் தனியார் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 02.02.2018 அன்று சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் நான் பணியில் இருந்தபோது மதியம் 12.45 மணியளவில் முருகன் என்பவர் என்னிடம் போக்குவரத்து காவல்துறையினரால் சிகிச்சைக்கு அழைத்துவரப்பட்டார். காவல்துறையினரிடம் விசாரித்தபோது காயம்பட்ட நபர் மதுபோதையில் இருசக்கரவாகனத்தை ஓட்டிவந்ததாகவும், மதியம் 12.45 மணியளவில் கோமதியம்பிகை டிரைவிங் ஸ்கூல் அருகே அவர் ஒரு அரசுப்பேருந்தில் மோதியதாகவும் தெரிவித்தார். அவரை பரிசோதித்தபோது அவர் கிரக்கநிலையில் காணப்பட்டார். அவரது மூச்சில் மதுவாசனை தென்பட்டது. அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. நாடியின் அடிப்பகுதியில் 6x1 செமீ அளவில் சிதைந்த காயம் காணப்பட்டது.

2. வலது தோள்பட்டையில் 1/2x1/2 செமீ அளவில் ஊடுருவு காயம் காணப்பட்டது.

3. இடதுபுறம் மார்பில் 3x1/2 செமீ அளவிற்கு மற்றுமொரு ஊடுருவு காயம் காணப்பட்டது.

அவருக்கு தலைக்காயம் ஏற்பட்டிருக்குமோ என்ற சந்தேகத்தில் மேல்சிகிச்சைக்காக அவரை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். காயம்பட்ட நபர் மதுபோதையில் வாகனத்தை ஓட்டியதால் அவருக்கு ஏற்பட்டவிபத்தில் மேற்கண்ட காயங்கள் ஏற்பட்டன என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தார்கள். **முருகன் என்பவரின் விபத்து பதிவேடு அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை**